**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.134/2023**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | மணிமாறன் | Prosecution | LW– as PW– |
| Father Name | முருகையன் | Defence | |
| Station | கீரனூர் உட்கோட்டகம் | Taluk | குளத்தூர் |
| District | புதுக்கோட்டை | Age | 58 /2025 |

Solemnly affirmed by Tmt.R. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day

**23.02.2026 எதிரிகள் ஆஜர்**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது. முதல் விசாரணை**

**1.** நான் தற்போது புதுக்கோட்டை மாவட்டம் கீரனூர் உட்கோட்டத்தில் காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2021 ம் ஆண்டு சீர்காழி காவல் நிலைய உதவி ஆய்வாளர் அசோக்குமார் அவர்களால் பதிவு செய்யப்பட்ட குற்ற எண். 23/2022 சட்டப்பிரிவுகள் 25(1)(B)(b)Arms Act, 294(b), 341, 386, 506(2) IPC படி புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். **அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சம்பவ இடத்திற்கு 13.30 மணிக்கு சென்று சாட்சிகள் கலைமாறன் மற்றும் தியாகராஜன் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த **பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் ஆகிவை அசாஆ.7 மற்றும் அசாஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் பட்டியல் சாட்சிகள் 3 முதல் 5 வரையிலானவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கின் எதிரிகளை தேடி வந்த நிலையில் எதிரி 2 மற்றும் 3 யை 11.02.2022 ம் தேதி அன்று சுமார் 16.00 மணிக்கு மேல செங்கமேடு பகுதியில் வைத்து எதிரிகளை கைது செய்து சாட்சிகள் மூர்த்தி மற்றும் சுந்தரமூர்த்தி முன்னிலையில் எதிரிகள் தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து அவர்கள் ஆஜர் செய்த அறுவாள் கைப்பற்றபட்டது. **அந்த கைப்பற்றுதல் மகசர்**

**அசாஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் நிலையம் வந்து எதிரிகளை பாரா வசம் ஒப்படைத்தேன். அன்றைய தினமே அவர்களை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் தடயத்தை படிவம் 91 மூலமாக CP.No.74/2023 ல் வழக்கு சொத்தாக தாக்கல் செய்தேன். **அந்த படிவம் 91 அசாஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் இந்த வழக்கின் முதலாம் எதிரி Crlmp.no.206/2022ன் படி முன்பினை பெற்றிருந்ததினால் அவர் கைது செய்யப்பட வில்லை. பின்னர் உதவி ஆய்வாளர் அசோக்குமார் அவர்களை விசாரித்து இத்துடன் இந்த வழக்கின் புலன் விசாரணை முடித்து 23.05.2022 ம் தேதி இவ்வழக்கின் எதிரி மீது சட்டப்பிரிவுகள் 25(1)(B)(b)Arms Act, 294(b), 341, 386, 506(2) IPC பிரிவின் படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கின் 1 ம் எதிரி மீது நான் ஏற்கனவே பணிபுரிந்த காவல் நிலையத்தில் முன் வழக்கு உள்ளது என்றால் சரிதான். எனது முதல் விசாரணையில் சொன்னது போல் சொன்ன தேதியில் சொன்னஇடத்தில் வைத்து கைது செய்யவில்லை என்றாலும் விசாரணை என்னும் பெயரில்ல காவல்நிலையத்திற்கு அழைத்து வந்து பொய்யான சங்கதிகளை வைத்து இந்த வழக்கினை புனைந்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும், வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சாட்சிகளை சரியாக விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. நிலுலையில் உள்ள வழக்கை முடிக்கவேண்டும் என்பதற்காக எதிரிகள் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கை சரியாக விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது இறுதி அறிக்கை தவறுதலாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.**

**மறுவிசாரணை இல்லை.**